


# எழுப்புதல் தொனி
EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-

Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-


# நான் உன்னோடு இருப்பேன்!


மலர்: 20 | Volume: 20 மே 2024 | May 2024 இதழ்: 1 | Issue: 1





சுவிசேஷப் பணியில் நமது மிஷனெரிகள்..
லம்டாபுட் பணித்தளம்.



# உங்கள் சகோதரனிடமிருந்து...



இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் சுகமாயிருக்கிறீர்களா? தினமும் வேதம் வாசித்து ஜெபம் பண்ணுகிறீர்களா? உங்கள் வாழ்க்கையில் காணப்படும் நெருக்கங்கள் மத்தியிலும் எல்லாவற்றையும் கடந்து இயேசுவும் நீங்களும் அன்பாய் இருக்கிறீர்களா? உங்கள் வீட்டிலே தினமும் குடும்ப ஜெபம் செய்கிறீர்களா? ஏனென்றால் உங்கள் ஆத்துமா குற்ற உணர்வில்லாமல் இயேசுவுக்கு முன்பாக நல்ல சாட்சி கொடுக்குமானால் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

கடந்த மாதத்தில் 210 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தற்போது நமது ஒடிசா மாநில பணித்தளத்தில் 16 இடங்களில் ஆலய கட்டுமானப் பணி நடைபெறுகிறது.

இந்த வருடத்திலும் VBS மூலமாக 10,000 பிள்ளைகளை சந்திக்க தீர்மானித்து செயல்பட்டு வருகிறோம். அதனுடைய தேவைகளுக்காகவும் பிள்ளைகள் கர்த்தருக்குள் கட்டப்படும்படியாகவும் உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள். நான் உங்களுக்காக நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபிக்கிறேன். தேவ கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

எழுப்புதல் பணியில்,

(T.ஆசீர் ஞானராஜ்)

24 மணி நேர ஜெப உதவிக்காக:
**94869 19522, 81909 25800**
ஊழிய விபரங்களுக்கு: 96294 99532
Email: calvarygospelmm@gmail.com

வங்கியில் பணம் அனுப்புவோர்,
**96294 99532**
எண்ணில் தெரிவிக்கவும்

Follow us youtube channel:
**Voice of Revival Media** (or)




## நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடே இருப்பேன். ஏசாயா 43:2

### தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

பிரியமானவர்களே, தண்ணீர்கள் என்பது உங்களுக்கு எதிராக இருக்கக் கூடிய சவாலான காரியங்கள். அது எப்படியும் இருக்கலாம். ஆனால் ஆண்டவர் உங்களைப் பார்த்து நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடே இருப்பேன் என்று சொல்லுகிறார்.

ஆண்டவர் ஒரு வாக்குத்தத்தத்தை கொடுப்பாரானால் அந்த வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசிக்கும் போது அதை ஆண்டவர் நமக்கு நிறைவேற்றக் கூடியவராக இருக்கிறார். விசுவாசத்தோடு கூட அதை ஏற்றுக்கொண்டு நாம் ஜெபிக்கும் போது ஆண்டவர் அதன் மூலமாக நம்மை ஆசீர்வதிக்கக் கூடியவராக இருக்கிறார். ஜனங்கள் எகிப்திலிருந்து ஒரு பெருங்கூட்டமாக புறப்பட்டு வந்தார்கள். வேத ஆராய்ச்சியின்படி இருபத்தைந்து இலட்சத்திற்கும் அதிகமானபேர் புறப்பட்டு வந்தார்கள். அநேக ராஜாக்களை அவர்கள் ஜெயித்தார்கள். அநேக தேசங்கள் வழியாக அவர்கள் கடந்து வந்தார்கள். வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அவர்கள்

வழிநடத்தப்பட்டார்கள். மோசே மரித்த பின்பு தேவன் யோசுவாவை எழுப்பினார். யோசுவா அந்த ஜனங்களை வழிநடத்தினதை நாம் பார்க்கிறோம். அவர்கள் வழிநடத்தப்பட்டு கானான் என்ற தேசத்திற்கு அருகிலே வரும் போது அதற்கு முன்னாக யோர்தான் ஆறு பிரவாகித்து ஓடினது என்று எழுதப்பட்டிருக்கிறது. அறுப்புக் காலத்திலே யோர்தான் கரைபுரண்டு ஓடும் என்று வேதம் சொல்லுகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் அந்த பிரயாணத்தின் போது தண்ணீருக்கு முன்பாக வந்து நின்றார்கள். அங்கே ஒரு நாள் இராத்தங்கியிருந்தார்கள். யோசுவா தேவ சமுகத்தில் காத்திருந்தான். தேவனாகிய கர்த்தர் என்ன சொன்னாரோ அதை மக்கள் மத்தியில் வந்து அவன் அறிவித்ததை நாம் பார்க்கிறோம். **யோசுவா ஜனங்களை நோக்கி: உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களை செய்வார் என்றான் – யோசுவா 3:5** நாற்பது வருஷத்திலே அவர்கள் சிவந்த சமுத்திரமான செங்கடலை கடந்து வந்ததை அநேகர் காணவில்லை. அந்த நாற்பது ஆண்டுகளிலே அநேகர் மரித்தும் போயிருக்கக் கூடும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை. இந்த யோர்தானுக்கு முன்பாக ஜனங்கள் வந்து நின்ற போது ஜனங்கள் திகைத்து போய் நிற்கிறார்கள். ஏனென்றால் முதியவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். சிறுபிள்ளைகள் அநேகம் பேர் இருக்கிறார்கள். ஏராளமான ஆடு மாடுகள் அவர்கள் தூக்கி சுமக்கக் கூடிய சுமைகள். அவர்கள் உபயோகப்படுத்தக் கூடிய பொருட்கள் அனைத்தையும் அவர்கள் சுமையாகவே சுமந்தார்கள். அனைத்தையும் எடுத்துக்கொண்டு இந்த தண்ணீரை எப்படி கடந்து போவது என்பது ஒரு சவாலான காரியமாய் இருந்தது. அறுப்புக்காலத்தில் யோர்தான் கரைபுரண்டு ஓடும். அது மேலிருந்து கீழாக ஓடி வந்தது என்று எழுதப்பட்டிருக்கிறது.

**ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக ஆறு நண்பர்கள் இரு சக்கர வாகனத்தில் கடந்து போகும் போது வழியில் பெரிய அளவில் பள்ளத்தாக்கு ஒன்று இருந்தது. மலை மேல் இருந்து தண்ணீர் ஓடி வருகிறது. அந்த சாலை வழியாக அவர்கள் போகும் போது அந்த தண்ணீரைக் கடந்து போக வேண்டும். அது ஒரு மழைக்காலம். அப்படி மழைக்காலமாய் இருந்த போது தண்ணீர் வழக்கத்தை விட**

**அதிகமாக ஓடி வந்தது. அதை அவர்கள் கடந்து போக வேண்டும். வந்தவர்களில் எல்லாரும் தண்ணீர் குறைந்த பிற்பாடு அதை கடந்து போகலாம் என்று கரையில் நின்றார்கள். அப்படி பொறுமையோடு காத்திருந்த சமயத்தில் ஒருவர் மாத்திரம் பொறுமையில்லாதவராக தன்னுடைய இருசக்கர வாகனத்தில் வேகமாக அந்த தண்ணீரைக் கடந்து செல்ல முயற்சி செய்த போது அந்த வெள்ளத்தில் அவரும் அவருடைய இருசக்கர வாகனமும் அடித்துச் செல்லப்பட்டது. அனைவரும் அவரைத் தேடினார்கள். காலையில் இருந்து மாலை வரைக்கும் என்ன நடந்தது என்றே தெரியவில்லை. அவருடைய சரீரம் ஐந்து கிலோ மீட்டர் தூரம் வரைக்கும் இழுத்து செல்லப்பட்டு மரக்கிளையில் அப்படியே சேர்ந்து பின்னிக் கிடந்தது.**

*தண்ணீர் என்பது சாதாரணமான காரியம் இல்லை. இப்பொழுது பெருங்கூட்டமாக அந்த தண்ணீரை கடந்து செல்ல வேண்டும். என்ன செய்வதென்று தெரியாதவராக நின்று கொண்டிருக்கிறார்கள். யோசுவா மூலமாக கர்த்தர் ஒரு வாக்குத்தத்தத்தை சொல்லுகிறார். இன்று உங்களை பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள். நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களை செய்வார். ஜனங்கள் எல்லாரும் தேவ சமுகத்தில் காத்திருந்து தங்கள் குறைகளை அறிக்கை செய்து அந்தநாளிலே அவர்கள் தங்களை பரிசுத்தம் பண்ணிக்கொண்டார்கள். அதன் பின்பு பிரயாணத்தை தொடங்கினார்கள். அப்பொழுது யோசுவா மூலமாக ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை என்னவென்றால் ஆசாரியர்கள் உடன்படிக்கை பெட்டியை சுமந்து கொண்டு யோர்தானில்*


WANTED

## முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய
வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 94869 19522.

போய் கால் வைக்கும் போது யோர்தான் இரண்டாக பிளந்து விடும் என்று கர்த்தருடைய வார்த்தையை யோசுவா சொல்லுகிறான். நீங்கள் ஆசாரியர்களை பின்தொடர்ந்து போக வேண்டும் என்று சொல்ல அதைப்போல அவர்கள் ஜெபம் பண்ணி ஆயத்தப்பட்டார்கள். முதலாவது உடன்படிக்கை பெட்டியை சுமந்து கொண்டு ஆசாரியர்கள் போய் யோர்தானிலே கால்வைத்தார்கள். வைத்த மாத்திரத்திலே மேலிருந்து கீழாக கரைபுரண்டு ஓடுகிற வெள்ளம் அப்படியே மலை போல குவிந்து நின்றது.

பிரியமானவர்களே, மணலை, தானியத்தை குவிக்கலாம். ஆனால் தண்ணீரை குவிக்க முடியுமா? நீங்களும் நானும் சேவிக்கிற கர்த்தர் நாம் ஆராதிக்கிற ஆண்டவர் அவர் சர்வ வல்லமையுள்ளவர். அவரால் செய்யக் கூடாத அதிசயம் ஒன்றுமே இல்லை. உங்கள் வாழ்க்கையில் ஒருவேளை பின்னல்களுக்குள்ளாக வலைகளில் அகப்பட்டதுபோல கட்டுகளிலும் நெருக்கத்திலும் இருந்து கொண்டு கண்ணீரோடு என்ன செய்வதென்று புலம்பிக் கொண்டிருக்கிறீர்களா? ஆண்டவர் தண்ணீர்களைக் கடக்கும் போது உங்களோடு கூட இருப்பார். தடைகளை தகர்த்துப் போடுவார். உங்கள் பாதைகளை அவர் செவ்வையாக்குவார்.

**முப்பத்து மூன்று வயது வரைக்கும் திருமணமே ஆகாத ஒரு வாலிப தம்பி. இயேசுவை ஏற்றுக்கொண்டவன். ஜெபிக்கக் கூடியவன். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஒரு நாள் தனது சபையின் போதகரிடத்திலே தனித்துப் பேச வந்தான். வீட்டில் எல்லாரும் நீ இயேசுவை ஏற்றுக்கொண்டு உன் வாழ்க்கையில் என்ன நன்மை நடந்தது. நாங்கள் போகிற வழிதான் சரி. நீ போகிற வழி சரியல்ல. ஏன் உன் ஆண்டவர் உனக்கு திருமணம் என்ற நன்மையைக் கொடுக்கவில்லை. உனக்கு முப்பத்து மூன்று வயதாகியும் உனக்கு ஒரு நன்மையும் வரவில்லையே என்று எல்லாரும் என்னை பரியாசம் பண்ணுகிறார்கள். என் நிமித்தம் ஆண்டவருடைய நாமம் தூஷிக்கப்படுகிறது ஐயா. எனக்காக ஜெபம் பண்ணுங்கள் என்று சொன்னான். அவரும் ஜெபம் பண்ணி அனுப்பி விட்டார். அவன் சொன்ன வார்த்தை அந்த போதகரின் இருதயத்தை அழுத்த ஆரம்பித்தது. அவனுக்காக அவர் ஜெபம் பண்ணினார். சில நாட்களில் ஒரு பெண்ணைப் பார்க்கும் படிக்கு அவனையும்**

அழைத்துக்கொண்டு ஜெபத்தோடு கூட கடந்து போனார். ஒரு தகப்பன் பிள்ளைக்காக பாரப்படுவது போல அந்த போதகர் அந்த தம்பியை அழைத்துக்கொண்டு அவர் கண்ணீரோடு ஜெபித்துக் கொண்டே பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தார். அவர்கள் ஒரு ஊருக்கு போய் மறுபடியும் பேருந்து பிடித்து இன்னொரு ஊருக்கு போக வேண்டும். முதலில் துவங்கி பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கும் போது ஆண்டவர் பேச ஆரம்பித்தார். நீ அழைத்து கொண்டு போகிற வாலிபன் வாழ்க்கையில் பாவம் இருக்கிறது. அவனுக்குள்ளே பரிசுத்தம் இல்லை. அவன் மனந்திரும்பி பாவத்தை விடும் போது நான் அவனை ஆசீர்வதிப்பேன். அவனுடைய எதிர்காலம் ஆசீர்வாதமாய் இருக்கும் என்று ஆண்டவர் அந்த போதகரோடு பேசத் துவங்கினார். அந்த போதகர் அந்த வாலிப தம்பியைப் பார்த்து கேட்டார். உன் வாழ்க்கையில் ஆண்டவர் நன்மையைக் கொடுப்பதற்கு உன்னை ஆசீர்வதிப்பதற்கு உன் வாழ்க்கையில் பாவம் தடையாய் இருக்கிறது. நீ சரியில்லாத ஒரு தொடர்பில் இருக்கிறாய். நீ இந்த பாவத்தை விட்டுவிடும்போது இயேசு உன்னை ஆசீர்வதிப்பார். இப்போதே எனக்கு முன்பாக நீ அலைபேசியை (Cellphone) எடுத்து பேசி முறையற்ற அந்த தொடர்பை துண்டிக்க முடியுமா? நீ அப்படி செய்தால் நான் உன்னோடு கூட தொடர்ந்து வருவேன். நாம் உனக்காக பெண் பார்க்கலாம். இல்லையென்றால் நாம் வந்த வழியாக திரும்பி போக வேண்டும் என்று சொன்னார். அவனோ மனங்கசந்து அழுதான். கொஞ்ச நேரம் அமைதியாக அந்த பேருந்து நிறுத்தத்தில் உட்கார்ந்து கொண்டு ஜெபித்தான். பிற்பாடு அவருக்கு முன்பாகவே அலைபேசியில் (Cellphone) அழைத்து எதிர்முனையில் மற்றொரு சகோதரியோடு தொடர்பு கொண்டு இனி இந்த தீய பழக்கம் நமக்கு வேண்டாம். இயேசு என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். மனிதர்களுக்கு முன்பாக என்னுடைய பாவத்தை நான் மறைக்கலாம். ஆனால் இன்றைக்கு என்னுடைய போதகருக்கே என் பாவத்தை ஆண்டவர் வெளிப்படுத்தி விட்டார். இனிமேல் நமக்குள் இந்த தவறான வாழ்க்கை வேண்டாம் என்று அவன் அவளிடத்தில் சொல்லி அலைபேசியை (Cellphone) துண்டித்து விட்டான். அவளுடைய அலைபேசி (Cellphone) எண்ணை அழித்து விட்டான். அவர்கள் இருவரும் ஜெபித்து பிரயாணம் பண்ணி கடந்து போனார்கள்.

**அந்த நாளிலே ஆண்டவர் அவனுக்கு பெண்ணை வாய்க்கப் பண்ணினார். அவனுடைய குடும்ப வாழ்க்கையை ஆசீர்வதித்தார். தனிமையை மாற்றினார்.**

ஒரு துணையை ஆண்டவர் கொடுப்பது ஒரு பெண்ணுக்கு ஒரு புருஷனை, ஒரு புருஷனுக்கு ஒரு பெண்ணை நியமித்து கொடுப்பது அது தேவனுடைய ஈவு. ***நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. – யாக்கோபு 1:17***

***...பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ள மாட்டான். – யோவான் 3:27*** உங்கள் வாழ்க்கையில் ஒரு நன்மை வரவேண்டுமானால் ஆண்டவர் ஒரு ஆசீர்வாதத்தை கொடுக்க வேண்டுமானால் ஆண்டவர் வெறுக்கக் கூடிய பாவத்திலிருந்து நீங்கள் வெளியே வரவேண்டும். அப்பொழுது தண்ணீர்களைக் கடக்கும் போது ஆண்டவர் உங்களோடு கூட வருவார். தடைகளை ஆண்டவர் மாற்றிப் போடுவார். அப்படிப் போலவே இஸ்ரவேல் ஜனங்கள் ஆயத்தப்பட்டார்கள். அவர்கள் கடந்து சென்ற போது ஆசாரியர்கள் யோர்தானில் போய் கால் வைத்த போது மேலிருந்து கீழாக ஓடி வந்த தண்ணீர் மலை போல குவிந்து நின்றது. அவர்களெல்லாரும் வெட்டாந்தரையில் நடப்பது போல நடந்து போனார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் ஸ்திரீகள், புருஷர்கள், மிருக ஜீவன்கள் எல்லாம் கடந்து செல்லுமட்டும் ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியை பிடித்துக் கொண்டவர்களாய் அதை சுமந்து கொண்டு அப்படியே நின்றார்கள். அவர்களெல்லாரும் கடந்து சென்ற பிறகு ஆசாரியர்களும் கடந்து சென்ற பிறகு அந்த தண்ணீர் மறுபடியும் முன்பு போல ஓடத்துவங்கியது.

ஒருவேளை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இப்போது சந்தித்து கொண்டிருக்கிற நெருக்கங்கள் ஒரு மலை போல ஒரு பெரிய காட்டாற்று வெள்ளம் போல இருக்கலாம். ஐயோ நான் என்ன செய்வது என்று வேதனையோடும் கண்ணீரோடும் காணப்படுகிறீர்களா? என்ன செய்வதென்று திகைத்துப் போய் நிற்கிறீர்களா? ஆண்டவர் தண்ணீர்களை கடக்கும்போது நான் உங்களோடு இருப்பேன் என்று அவர் உங்களுக்கு ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். அவர் வாக்குத்தத்தத்திலே உண்மையுள்ளவராய்

இருக்கிறார். ஆண்டவரிடத்திலே இந்த நன்மையை பெற்றுக்கொள்வதற்கு நம்முடைய பாவம் தடையாய் இருக்கக் கூடாது. இன்றைக்கு முழு உலகமும் பாவத்தை விடாமல் எனக்கு நன்மை கிடைக்குமா பரிகாரம் கிடைக்குமா ஆசீர்வாதம் கிடைக்குமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே பாவத்தின் அடிமைத்தனம் இருக்கும் போது அவனை ஆண்டவர் ஆசீர்வதிக்கவே முடியாது. அவனுடைய ஜெபம் கேட்கப்படாது. ஆனால் உள்ளம் உடைந்து தன்னுடைய பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு ஆண்டவரே என்னை மன்னியும் என்று அவரிடத்தில் ஒப்புரவாகி அவன் தேவனிடத்திலே ஜெபிக்கும் போது அவனுக்கு நன்மையை அபரிவிதமாய் அளவில்லாமல் கொடுத்து ஆசீர்வதிக்கக் கூடியவராக இருக்கிறார்.

**ஒரு வாலிப சகோதரி நம்முடைய ஊழியத்தின் பெண்கள் ஜெபக்குழுவிலே ஒரு உறுப்பினராக இருந்தார். தவறாமல் அந்த ஜெபத்திலே கலந்து கொள்ளுவாள். நன்றாக பாரத்தோடு ஜெபம் செய்வாள். பின்பு அவள் வேலை கிடைத்து தூரமாய் பட்டணத்தில் போய் வேலை செய்தாள். அங்கே தங்கி அவள் வேலை செய்தபோது ஆண்டவரை அறியாத ஒரு வாலிபனோடு கூட இணைந்து வாழ்ந்தாள். குடும்பத்தினருக்கு தெரியாமலே அவனை திருமணம் செய்து கொண்டாள். அப்படி அவள் வாழ்க்கை கடந்து சென்றது. அவனோடு சேர்ந்து அவள் வாழ்ந்தது மாத்திரமல்ல அவன் பின்பற்றக் கூடிய தெய்வத்தையும் இவள் பின்பற்றிப் போக ஆரம்பித்தாள். குடும்பத்தார் எவ்வளவோ எதிர்ப்புகள் தெரிவித்த போதிலும் அவள் தனது முடிவை மாற்றிக்கொள்ள மனதில்லாதவளாக இருந்தாள். பிற்பாடு அவளுடைய குடும்ப வாழ்க்கை ஒரு சில மாதங்களுக்குள்ளாக முடிவுக்கு வந்து விட்டது அவன் இவளை விட்டு விட்டு தன்னுடைய சொந்த குடும்பத்தாரோடு போய் சேர்ந்து கொண்டான். இவளோ அந்த பட்டணத்திலே இவர்கள் தங்கியிருந்த அந்த வீட்டிலே தனித்து வாழ்ந்து கொண்டிருந்தாள். ஏன் அவன் அவளை விட்டு விட்டுப் போக வேண்டும்? அவர்கள் சேர்ந்து வாழத் துவங்கின எட்டாவது மாதத்திலே அவளுடைய சரீரத்திலே பலவீனப்பட்டாள். அவள் போய் மருத்துவரிடத்தில்**

சோதித்து பார்த்த போது அவளுடைய இரண்டு சிறுநீரகமும் பழுதடைந்து டையலிசிஸ் பண்ணக் கூடிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டாள். ஒரு வாரத்தில் இரண்டு நாள் டையலிசிஸ் பண்ணியே ஆக வேண்டும். வியாதிப்பட்டவுடனே நீ எனக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டு அவன் ஓடிப்போய் விட்டான். இதைக் கேள்விப்பட்ட பெற்றோர் கண்ணீரோடு அவளை வீட்டிற்கு அழைத்து கொண்டு வந்தார்கள். அவர்களால் இயன்ற மட்டும் அந்த மகளுக்காக பிரயாசப்பட்டார்கள். அங்குமிங்குமாக மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு போனார்கள். கடைசியாக மருத்துவர்கள் உங்கள் மகளுடைய வாழ் நாட்கள் இனி கொஞ்சம் தான் என்ற சூழ்நிலையை அவர்கள் சொல்ல மிகவும் துக்கப்பட்டார்கள். இவளோ அப்போது தான் உணர்வடைந்து தான் விட்ட தெய்வத்தை தேட ஆரம்பித்தாள். ஆண்டவரித்தில் அழுதாள். ஜெபிக்க ஆரம்பித்தாள். ஒரு நாள் என்னை சந்திக்கும்படியாக அவளுடைய பெற்றோரோடு கூட வந்தாள். நான் அவளை பார்த்தபோது இவளா என்று சொல்லத்தக்க விதமாக அவளுடைய சரீரம் எல்லாம் உருக்குலைந்து அழகெல்லாம் போய் பரிதவிக்கக் கூடிய நிலையிலே காணப்பட்டாள். அந்த சமயத்திலே அவள் என்னைப் பார்த்து அண்ணா, உங்கள் முகத்தைப் பார்ப்பதற்கே என்னால் முடியவில்லை. உங்கள் முகத்தையே என்னால் பார்க்க முடியவில்லையே நான் என் ஆண்டவருடைய முகத்தை எப்படி பார்க்கப் போகிறேன். நான் ஒரு பாவி என்று உள்ளம் உடைந்து அழ ஆரம்பித்தாள்.

உனக்கு இயேசுவினிடத்தில் இரக்கம் உண்டு என்று வசனங்களை எடுத்துச் சொல்லி அவளுக்காக பாரத்தோடு கூட நான் ஜெபம் பண்ணி அனுப்பி விட்டேன். தண்ணீர் குடிக்கமுடியவில்லை, சாப்பிட முடியவில்லை வயிறெல்லாம் வீங்கி போய் இருந்த நிலை. அவள் ஆண்டவரோடு கூட ஐக்கியப்பட்டாள். அவளுடைய வீட்டிற்கு கடந்து சென்றாள். நன்றாக தண்ணீர் குடிக்க ஆரம்பித்தாள். சாப்பிட ஆரம்பித்தாள். சரீரத்திலே மாற்றங்களை உணர ஆரம்பித்தாள். அப்படியிருக்க அவளுக்குள்ளே ஏதோ ஒரு மாற்றம் வந்திருக்கிறது அது என்ன என்று சோதிக்க வேண்டும் என்று அதே மருத்துவரிடத்தில் போய் மறுபடியும் அவர்கள் பரிசோதித்து பார்த்த போது அந்த மருத்துவர் உனக்கு சிறுநீரகத்தில் பிரச்சனை என்று யார் சொன்னார்கள் என்று கேட்டிருக்கிறார். இவர்களுக்கோ சந்தோஷம் தாங்க முடியவில்லை. இயேசு என்னை தொட்டார்

**என்னை ஆசீர்வதித்தார். அற்புதமான சுகத்தைக் கொடுத்தார் என்று சொல்லி மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள்.**

ஆம் பிரியமானவர்களே, ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே பாவம் இருக்குமட்டும் ஆண்டவரால் இரக்கம் செய்யவே முடியாது. ஆனால் தன்னுடைய பாவத்திற்காக ஒரு மனிதன் மனஸ்தாபப்படும்போது ஆண்டவர் மனதுருக்கம் கொண்டு அவனுடைய வாழ்க்கையிலே இறங்கி வரக் கூடியவராய் இருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் பிரயாணம் பண்ணிக் கொண்டிருந்த போதுதான் அவர்கள் நடுவிலிருக்கிற பாவத்தையெல்லாம் ஆண்டவர் பார்க்கிறார். அவர்கள் மத்தியிலே ஒரு சுத்திகரிப்பு தேவை. அவர்கள் யோர்தானுக்கு முன்னாக போய் நின்ற போது அங்கே உன்னதத்திலிருந்து தேவன் கட்டளை கொடுக்கிறார். இன்று உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். நாளைக்கு நான் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வேன்.

என்னுடைய வியாபாரத்திலே மாற்றமே இல்லை என்னுடைய வியாபாரம் தோல்வியடைந்து விட்டது. நான் இன்றைக்கு கடன் பாரத்தோடு நிற்கிறேன். என்னுடைய குடும்பம் இன்றைக்கு உடைந்து போய் நான் தனிமரமாக நிற்கிறேன். எல்லாவற்றையும் இழந்து வெறுமையாய் நிற்கிறேன் என்று துக்கத்தோடு வேதனையோடு இருக்கிறீர்களா! கூட்டாக இணைந்து நீங்கள் தொழில் செய்து உங்களோடு இணைந்து வியாபாரம் செய்தவரால் ஏமாற்றப்பட்டு எல்லாவற்றையும் இழந்து வெறுமையாக இதை வாசித்துக் கொண்டிருக்கிறீர்களா! இயேசு உங்கள் வேதனைகளை அறிந்து உங்கள் அருகில் வருகிறார். உங்கள் வாழ்க்கை பரிசுத்தமடையும் போது இயேசு தடைகளை தகர்த்துப் போடுவார்.

நீங்கள் கேட்டுக்கொள்வதும் கேளாததுமான ஆசீர்வாதங்களை நிறைவாக கொடுத்து உங்களை மகிழ்ச்சியாக்கும்படியாக அவர் உங்கள் அருகில் இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்காக யோர்தானை இரண்டாக பிளந்து தண்ணீரை மலை போல குவித்த ஆண்டவர் உங்கள் வாழ்க்கையிலும் இது முடியாது இது நடக்காது வாய்ப்பே இல்லை என்று சொல்லக் கூடிய காரியத்திலும் ஆண்டவர் உங்களுக்காக ஒரு அற்புதத்தை செய்யும்படியாக உங்கள் மத்தியில் வந்திருக்கிறார். எனவே கலங்காதீர்கள்!



# பணித்தளச் செய்திகள்

## ஒடிசா மாநிலம்

### கோராபுட் மாவட்டம் லம்டாபுட் பணித்தளம்

**துதியுங்கள்:**

- குனைய்படா கிராமத்தில் மனோஜ் என்பவன் மிகவும் பலவீனத்தில் பாதிக்கப்பட்டு சோர்ந்து போன வேளையில் தேவன் சுகம் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.
- பவுஸ்குடா கிராமத்திற்கு சென்று ஆராதனை நடத்தி வருகிறேன். ஜனங்கள் வாஞ்சையோடு சபையில் பங்கு பெற்று வருகின்றனர். பூனாம்மா என்ற சகோதரிக்கு கால் வீங்கி நடக்க முடியாமல் வலியினால் வேதனைப்பட்டார். இந்த சகோதரிக்கு ஜெபித்த வேளையில் தேவன் அற்புத சுகம் கொடுத்தார்.
- சொயில்பாடா கிராமத்தில் சுபாஷ் கிலோ என்ற வாலிபன் வலிப்பு வியாதியினால் பாதிக்கப்பட்டு அடிக்கடி கீழே விழுந்து விடுவார். தேவனுடைய கிருபையினால் இந்த சகோதரனுக்காக கண்ணீரோடு ஜெபித்த போது தேவன் அற்புத விடுதலை கொடுத்தார். தேவ நாமம் மகிமைப்படுவதாக!
- குனைய்பாடா கிராமத்தில் புஜ்ஜி என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலமாக தேவன் சுகப்பிரசவத்தில் அழகான பெண் குழந்தை கொடுத்துள்ளார்.
- மலையங்கா என்ற கிராமத்தில் கர்த்தருடைய கிருபையினால் தினமும் ஜெபிக்க கிருபை செய்துள்ளார். இக்கிராமத்தில் மோய்ரோ பங்கி என்பவர் வாஞ்சையோடு சுவிசேஷம் கேட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக உள்ளார்.

## கோராபுட் மாவட்டம்
## லம்டாபுட் பணித்தளம்

**துதியுங்கள்:**

- குனைய்படா கிராமத்தில் மனோஜ் என்பவன் மிகவும் பலவீனத்தில் பாதிக்கப்பட்டு சோர்ந்து போன வேளையில் தேவன் சுகம் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.
- பவுஸ்குடா கிராமத்திற்கு சென்று ஆராதனை நடத்தி வருகிறேன். ஜனங்கள் வாஞ்சையோடு சபையில் பங்கு பெற்று வருகின்றனர். பூனாம்மா என்ற சகோதரிக்கு கால் வீங்கி நடக்க முடியாமல் வலியினால் வேதனைப்பட்டார். இந்த சகோதரிக்கு ஜெபித்த வேளையில் தேவன் அற்புத சுகம் கொடுத்தார்.
- சொயில்பாடா கிராமத்தில் சுபாஷ் கிலோ என்ற வாலிபன் வலிப்பு வியாதியினால் பாதிக்கப்பட்டு அடிக்கடி கீழே விழுந்து விடுவார். தேவனுடைய கிருபையினால் இந்த சகோதரனுக்காக கண்ணீரோடு ஜெபித்த போது தேவன் அற்புத விடுதலை கொடுத்தார். தேவ நாமம் மகிமைப்படுவதாக!
- குனைய்பாடா கிராமத்தில் புஜ்ஜி என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலமாக தேவன் சுகப்பிரசவத்தில் அழகான பெண் குழந்தை கொடுத்துள்ளார்.
- மலையங்கா என்ற கிராமத்தில் கர்த்தருடைய கிருபையினால் தினமும் ஜெபிக்க கிருபை செய்துள்ளார். இக்கிராமத்தில் மோய்ரோ பங்கி என்பவர் வாஞ்சையோடு சுவிசேஷம் கேட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக உள்ளார்.
- கங்கராபாடா கிராமத்தில் சொம்புரு கிறிஸானி என்பவரின் குடும்பம் இயேசுவை ஏற்றுக்கொண்டு வாஞ்சையோடு ஆராதனையில் பங்கு பெற்று வருகின்றனர்.

**ஜெபியுங்கள்:**

- பவுஸ்குடா கிராமத்தில் செல்லம்மா என்ற விசுவாசியின் மகன் சுமன் என்பவன் புறஜாதி (கிறிஸ்தவரல்லாத) பெண்ணை திருமணம் செய்ததின் மூலமாக குடும்பத்தில் மிகவும் பிரச்சனை காணப்படுகிறது. இக்குடும்பம் சமாதானத்தை இழந்து தவிக்கின்றனர். இக்குடும்ப சமாதானத்திற்காக ஜெபியுங்கள்.

- உப்ரே மாங்டி கிராமத்தில் டொமு என்ற சகோதரனுக்கு திருமணமாகி 15 வருடம் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் மிகவும் துக்கத்தோடு உள்ளார். தேவன் குழந்தை பாக்கியம் தர ஜெபியுங்கள்.
- உப்ரே மாங்டி கிராமத்தில் தேபோ என்பவரின் மனைவி வாஞ்சையோடு சுவிசேஷம் கேட்டு, இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளார். தேபோ என்பவர் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.
- மலையங்கா கிராமத்தில் வாழுகிற இராணா, கோவ்டு, கொதபா ஆதிவாசி, டோமோ இன மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆலயத்திற்கு வர ஜெபியுங்கள்.

**சுவிசேஷ ஊழியம்**

- முல்யாபுட், சுரங்கைபாடா, பல்தாபுட், ஒன்ஜோர், ஜோலாகுடா, பாமி, தொக்கா என்ற கிராமங்களுக்கு சென்று சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். சொர்ஜிகுடா, உப்ரேமால்டா, டுர்காபுட், தொட்டாபாடா, தொலே மாக்டி, சொர்கிகுடா, சில்பா என்ற கிராமங்களுக்கு சென்று சுவிசேஷம் அறிவித்தேன். இக்கிராமத்தில் தேவன் சுவிசேஷ வாசலை திறந்துள்ளார்.

## நபரங்கபூர் மாவட்டம் உமர்கோட் பணித்தளம்

**துதியுங்கள்:**

- கஜ்ரிகுடா கிராமத்தில் புதிதாக மூன்று குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு, சபை ஆராதனைக்கு வருகின்றனர். நுவாகுடா கிராமத்தில் 4 சகோதரிகள் இயேசுவை ஏற்றுக்கொண்டு வருகின்றனர். தேவ நாமம் மகிமைப்படுவதாக.
- லொகரகுடா கிராமத்தில் வயதான தம்பதியினர் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக உள்ளனர்.
- நுவாகுடா கிராமத்தில் டீகோ சுனாமி என்ற சகோதரி பிசாசின் பிடியினால் அலைக்கழித்தது. இயேசுவின் நாமத்தில் ஜெபித்த போது பிசாசு அந்த சகோதரியை விட்டு ஓடியது. தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார்.

**ஜெபியுங்கள்**

- புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் விசுவாசத்தில் பலப்பட ஜெபியுங்கள்.
- காஜ்ரி என்ற கிராமத்தில் லெங்கு பாங்கி, பிலி என்பவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
- லோகர்குடா கிராமத்தில்

சோபாஹர்ஜன்என்றசகோதரி இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆராதனைக்கு வர ஜெபியுங்கள்.

- சீமாஞ்சலி என்ற 12 வயது சிறுமி இடது கால் வளைந்து நடக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறாள். தேவன் அற்புதம் செய்ய ஜெபியுங்கள்.

**சுவிசேஷ ஊழியம்:**

- ஜொந்திரிகுடா, பல்யாபெடா, நவராபங்கிரி, மொய்லி, ஏக்காம்மா, விக்யா, கோரம்மா, ரோம்மபடிகுடா, சார்பொந்த், தேக்குடா, ஆம்பாகாபடா என்ற கிராமங்களுக்கு சென்று துண்டு பிரதி கொடுத்து சுவிசேஷம் அறிவித்தேன். இக்கிராம மக்கள் வாஞ்சையோடு சுவிழிசுஷம் கேட்டனர்.

## கோராபுட் மாவட்டம் கோட்பாடு பணித்தளம்

**துதியுங்கள்:**

- பிராம்னி கிராமத்தில் பத்ராஸ் என்ற சகோதரனுக்கு வயிற்றோட்டம் மற்றும் வாந்தியினால் மிகவும் அவதிப்பட்டார். ஜெபித்த போது அற்புத சுகம் பெற்றார்.
- ராஜோடா என்ற கிராமத்தில் சஞ்சிதா என்ற சகோதரி இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக உள்ளார்.
- பிராமனி கிராமத்தில் சபை ஆராதனையில் 15 பேர்கள் பங்கு பெற்று வருகின்றனர்.
- அம்பாகுடா கிராமத்தில் சபை ஆராதனையில் 8 பேர்கள் பங்கு பெற்று வருகின்றனர்.
- அம்பாகுடா கிராமத்தில் 3 சிறுவர், சிறுமிகள் (இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்த) இயேசுவை ஏற்றுக்கொண்டு சபை ஆராதனைக்கு வருகின்றனர்.

**ஜெபியுங்கள்:**

- பிராமனி கிராமத்தில் சூலேக் என்ற சகோதரன் பக்கவாத வியாதியினால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக உள்ளார். தேவன் அற்புதம் செய்யும்படியாக ஜெபியுங்கள்.
- பிராமனி கிராமத்தில் ரோய்னு என்ற சகோதரிக்கு 10 வருடமாக குழந்தை பாக்கியம் இல்லாமல் மிகவும் துக்கத்தோடு இருக்கிறார். தேவன் குழந்தை பாக்கியம் தரும்படியாக ஜெபியுங்கள்.
- பிராம்னி கிராமத்தில் உள்ள விசுவாசிகளுக்கு அந்த கிராமத்தில் மிகவும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். விசுவாசிகளுக்கு விரோதமாய் உள்ள எதிர்ப்பு மாற ஜெபியுங்கள்.

## கோராபுட் மாவட்டம் லம்டாபுட் பணித்தளம்

**ஜெபக்குறிப்புகள்:**

- ரிசி மினியாக்கா என்ற

சகோதரியின் மகள் காயத்திரி மினியாக்கா என்ற வாலிப மகள் 9வது படிக்கிறாள். நன்றாக படிக்க ஜெபியுங்கள்.

- பணித்தா மினியாக்கா, புஸ்பா ஜானி ஆகியோரும் இந்த ஆண்டு 10ம் வகுப்பு போகிறார்கள். நன்றாக படித்து, நல்ல மதிப்பெண்களோடு தேர்வாக ஜெபியுங்கள்.
- ஈஸ்வர் ஜானி என்பவர் அரசு பள்ளி ஆசிரியர். இவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.
- சலோமி என்ற சகோதரியின் கணவன் பத்ரா என்பவர் வேறு பெண்ணுடன் வாழ்ந்து வருகிறார். இவர் மனந்திரும்பவும், இந்த சலோமி சகோதரிக்கு மன உளைச்சலிருந்து கர்த்தர் விடுதலை கொடுக்கவும் ஜெபியுங்கள்.
- அங்கதோ சாந்தா என்பவர் சபையின் மூப்பர். இவர் சபை காரியங்களில் முழுமனதுடன் ஈடுபட ஜெபியுங்கள்.
- எங்களது கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். வாலிபர்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபியுங்கள்.
- பல்லிகாட் ஜெம்மாபதி சாந்தா என்ற சகோதரியின் மகன் அசுத்த ஆவியின் பிடியில் இருந்தான். ஜெபத்தினால் கர்ததர் விடுதலை கொடுத்தார்.
- பொரஜா, சுண்டி இன மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- மகேஸ்வர் ஜானி, குப்போ ஜானி ஆகியோர் ஆராதனைக்கு வருகிறோம் என்று கூறியுள்ளனர். இவர்களுக்கு புதிய ஏற்பாடு, பைபிள் கொடுத்துள்ளேன். இவர்கள் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வரும்படி ஜெபியுங்கள்.
- தொன்யோ முதலி, பஞ்சு முதுலி ஆகியோர் பின்மாற்றமாகியுள்ளனர். இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- பாரிகுடா கிராமத்தில் சொகாயிஜானிஎன்றசகோதரி பின்மாற்றமாகியுள்ளார். இந்த சகோதரி வேறொருவருடன் திருமணம் செய்து கொண்டதால் இவர்களது பெண் குழந்தைகள் கவனிப்பார் இல்லாமல் மிகுந்த கஷ்டத்தில் உள்ளனர். இவர்கள் குடும்பத்திற்காக ஜெபியுங்கள். பிஜீ என்பவர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- சேனாபதி ஜானி என்பவர் இரட்சிக்கப்பட்டு ஆலயத்திற்கு வரவும், மதுபான பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும் ஜெபியுங்கள்.
- தொனொ என்ற சகோதரி தலையில் சடை போட்டுள்ளது. இவர்கள் பிசாசு பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. "தமிழ் புதல்வன்" திட்டம் மூலம் மாணவர்களுக்கு ரூ.1000 வழங்கும் பணி ஜுலை மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா தெரிவித்தார்.
2. இந்தியாவின் இரண்டு முன்னணி மசாலா பொடித் தயாரிப்பு நிறுவனங்களின் சில குறிப்பிட்ட மசாலா பொடிகளின் மாதிரிகளில் எத்திலின் ஆக்சைடு என்ற பூச்சி கொல்லி மருந்து இருப்பதாக கூறி அவற்றுக்கு ஹாங்காங் உணவுப்பொருள் ஒழுங்குமுறை நிறுவனம் தடைவிதித்துள்ளது.
3. மத்திய பிரதேசத்தில் மணல் கடத்தல் கும்பலால், போலீஸ் அதிகாரி டிராக்டர் ஏற்றி கொலை செய்யப்பட்டார்.
4. போர் நீடித்து வரும் நிலையில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.
5. காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்திருந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேட்டன்யாகு அதனை நிராகரித்தார்.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக "CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

| | |
|---|---|
| வங்கி முகவரி: | **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM, CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT. |
| Account No: | **012401000017528.** |
| Branch IFS Code No: | **IOBA0000124** |

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 81909 25800 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஒசூர் | – 94869 07831 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 94869 19522 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 94865 88270 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.



ஒடிசா மாநிலம், கோராபுட் மாவட்டம்,
லிமாபுட் கிராமத்தில் செங்கல் சூளையில்
வேலை செய்யும் மக்களுக்கு சுவிசேஷம்.








Registered Newspaper RNI No. TNTAM/2003/15637, Postal Registration No.: TTN/10/2024-2026.
WPP No.: TN/WPP – 192/SR/2024-2026
Date of publication on 10.05.2024. Posted at Mudalur P.O., Tuticorin Dist. - 628 702 on 14th and 15th of every month.

முதலூரில்...

# எழுப்புதல் உபவாச ஜெபம்



சகோ.
**T. ஆசீர் ஞானராஜ்**

நாள்:
**01.06.2024**
சனிக்கிழமை
காலை 10 மணி முதல்
மாலை 3 மணி வரை

இடம்:
எழுப்புதல் ஜெப மையம்,
முதலூர்.

## காணத்தவறாதீர்கள்!

நம்பிக்கை தொலைக்காட்சியில்...

# வேதமே வெளிச்சம்



என்ற நிகழ்ச்சி ஒவ்வொரு வியாழக்கிழமையும் காலை 7 மணி முதல் 7.30 மணி வரை ஒளிபரப்பு செய்யப்படுகிறது.
இந்நிகழ்ச்சியை உங்கள் அருமையானவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

Follow us youtube channel:
**Voice of Revival Media**

To,

If Undelivered Please return to
**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 96294 99532**